**தேசிய பாதுகாப்பு ஆய்வுகள் நிறுவகம், இலங்கை (INSS)**

**பணிப்பாளர் (தொடர்பாடல் மற்றும் வெளியீடு) பதவிக்கான விளம்பரம்**

| | |
|---|---|
| வேலை இலக்கம் | INSS/2016/020 |
| வேலைத் தலைப்பு | பணிப்பாளர் (தொடர்பாடல் மற்றும் வெளியீடு) |
| வேலை வகை | தொடர்பாடல் |
| பதவி எண்ணிக்கை | ஒன்று |
| அறிக்கையிடல் தொடர்புமுறை | பணிப்பாளர் நாயகம் |
| தலைமைத்துவ நோக்கு | |
| சம்பளமும் ஏனைய ஊதியங்களும் | • ரூ. 100,000 (சகலதும் உள்ளடங்கலாக) |
| ஒப்பந்தம் | நிறுவகத்தில் சேர்ந்த திகதியிலிருந்து தொடக்க மூன்று மாதங்கள் தகுதிகூர் நிலையை உள்ளடக்கிய ஒரு வருட நிலையான காலத்திற்காக. இது செயலாற்றுகையில் எந்தவொரு உரிமையையும் வழங்காது. |
| வயது எல்லை | 60 வருடங்களுக்குக் கீழ் |
| கல்வித் தகைமைகள் | பரீட்சார்த்தி பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.<br><br>**ஆகக் குறைந்த தகைமை**<br>ஆகக் குறைந்தது 6 தொடக்கம் 8 வருடங்கள் தொடர்பாடல் அனுபவத்துடன் முது கலைமாணி / முது விஞ்ஞானமாணி / சம்பந்தப்பட்ட துறையில் முதுமாணிப் பட்டம்<br><br>**முன்னுரிமை**<br>• ஒருங்கிணைந்த படை ஒன்றாகச் சேவையாற்றுவதற்கான ஆற்றலுடன்கூடிய துடிப்பான, முதிர்ச்சியான, தலைமைப் பண்பும், தந்திரோபாயம் மற்றும் செயல் உத்தி மட்டங் களில் கலந்துரையாடுகின்ற தொடர்பாடல் நிலையும்<br>• சம்பந்தப்பட்ட பாடத்தில் கலாநிதிப் பட்டத்தை நிறைவு செய்து, உயர் ஒழுங்கில் பெருமகனாரால் திறனாய்வு செய்யப்பட்ட ஆய்வுப் கட்டுரையை வெளியிட்ட பரீட்சார்த்தி<br>• மிகவுயர்ந்த கூடி வேலை செய்யும் பாங்கு ; தொடர்பாடலை விருத்தி செய்து நடைமுறைப்படுத்துவதில் அனுபவமும் வெளியீட்டு உபாயங்களும்<br>• வெளியீடுகளின் கல்விசார் மற்றும் பிரபல பார்வையாளர் / பதிவுக்கான மிகச்சிறந்த எழுதுதல் மற்றும் தொகுப்பாக்கல் திறன்கள்<br>• மிக்ச சிறந்த உளப்பகுப்பாய்வு, எழுதுதல் மற்றும் வாய்வழித் தொடர்பாடல் திறன்கள்<br>• பத்திரிகை மற்றும் சமூக ஊடகத் திறன்கள் (பத்திரிகை வெளியீடுகள், முகப்புத்தகம், டுவிட்டர் போன்றவை) |
| தொழில்சார் அனுபவம் | • பல்வேறு வெளியீடுகள் மற்றும் தொடர்பாடல் இயல்திறன்களில் ஆகக்குறைந்தது 6 வருட அனுபவம். ஓய்வுபெற்ற படைச் சேவை அதிகாரிகளும் விண்ணப்பிக்கலாம். |

| | |
|---|---|
| ஒட்டுமொத்த நோக்கமும் வகிபாகமும் | தெரிவுசெய்யப்பட்ட நிலையத்தையும் நிறுவகத்தின் வெளியீடுகள் மற்றும் தொடர்பாடல்களுக்கான நுணுக்கங்கள் மற்றும் முறையியல்களின் மேம்பாட்டிற்குப் பங்களிப்புச் செய்யும் யோசனைகளையும் கூட்டிணைப்பதுடன் தனக்கேயுரிய பிரதான தொடர்பாடலுக்கு சரிமட்டமாக நிலையப் பணிக்கான குறிப்பிடத்தக்க முயற்சிகளை எடுப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது. |
| வேலை விவரணம் | • பதிப்பாற்றலுடன்கூடிய ஒரு குழாத்தினைக் கட்டியெழுப்பிப் பேணுவதுடன் பதிப்பாசிரியர்கள், பிழைதிருத்துநர்கள், வடிவமைப்பாளர்கள், விநியோகத்தர்கள் போன்றவர்களுடனான உறவை கட்டியெழுப்புதல் / முகாமை செய்தல்<br>• வெளியீடுகளின் மேம்படுத்தல்கள் மற்றும் விரிவாக்கங்கள் போன்றவற்றிற்காக பங்களிப்பாளர்களுடன் ஒருங்கிணைப்புச் செய்தல்<br>• வெளியீடுகளை முன்வைக்கத் தேவையான நிகழ்வுகள் மற்றும் மாநாடுகளில் பொதுப் பேச்சுக்கள்<br>• நிதி திரட்டலுடன் சம்பந்தப்பட்ட வெளியீடுகள் மற்றும் தொடர்பாடல்களுக்காக எழுத்துமூல மற்றும் எண்ணக்கருக் குறிப்புகளை வழங்குவதன் மூலம் பணிப்பாளர் நாயகத்திற்கு உதவுதல்<br>• பணிப்பாளர் நாயகத்தின் ஒப்புதலுடன்கூடிய வேறு நிறுவனம்சார்ந்த பணிகள் |
| விரும்பப்பட்ட திறன் தொகுதி | • சம்பந்தப்பட்ட பரப்புகளுடன் தொடர்புபட்ட தேசிய மற்றும் சர்வதேச நடப்பு விவகாரங்களை பகுப்பாய்வு செய்வதில் மிகுந்த ஆர்வம்<br>• இளம் புலமையாளர்களுக்கு தலைமைத்துவத்தை வழங்குதல்<br>• மிகச் சிறப்பான தொடர்பாடல் மற்றும் உளப்பகுப்பாய்வுத் திறன்கள்<br>• விபரங்களைக் கவனிப்பதில் உள்ள ஆற்றல்<br>• கண்டிப்பான காலக்கெடுவினுள் பணியாற்றுதல்<br>• உயிர்ப்புடனான வேலை<br>• இரகசியத்தன்மையை மிக உயர்ந்த நிலையில் பேணுவதற்கான ஆற்றல்<br>• அணி வேலைக்கான இயல்திறன் |
| தேவையான ஆவணங்கள் | • முகப்புக் கடிதம்<br>• முழுமையான சுயவிபரம்<br>• நோக்கக் கூற்று<br>• தங்களைப் பற்றிக் கூறக்கூடிய இருவரது கடிதங்கள்<br>• பரீட்சார்த்தி தற்போது அரசாங்க அல்லது தனியார் துறையில் பணியாற்றி அவர் நேர்முகப் பரீட்சைக்கான குறுகிய பட்டியலில் இடம்பெற்றால் நேர்முகப் பரீட்சைக்கு முன்பதாக / நேர்முகப் பரீட்சையின்போது அவரது வேலை தருநரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் ‘‘எந்தவித ஆட்சேபனையும் இல்லை’’ என்ற சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| விண்ணப்பிக்கும் முறை | • ஆர்வமுள்ள பரீட்சார்த்திகள் தமது ஆவணங்களை மின்னஞ்சல் மூலமாக inss.srilanka@gmail.com என்ற முகவரிக்கு அனுப்பலாம்.<br>• விடயத் தலைப்பில் ''வேலை விண்ணப்பம் : பணிப்பாளர் தொடர்பாடல் மற்றும் வெளியீடுகள்'' எனக் குறிப்பிடுக.<br>• மாற்றுவழியாக, விண்ணப்பப்படிவத்தை ''பணிப்பாளர் தொடர்பாடல் மற்றும் வெளியீடுகள் பதவிக்கான விண்ணப்பம்'' என தெளிவாக தலைப்பிடப்பட்ட கடித உறையில் இட்டு, மேலதிக செயலாளர் (கொள்கை மற்றும் திட்டமிடல்), பாதுகாப்பு அமைச்சு, 15/5, பாலதக்ஷ மாவத்தை, கொழும்பு 03. என்ற முகவரிக்கு அனுப்ப முடியும். |
| விண்ணப்ப இறுதித் திகதி | • விண்ணப்பங்கள் 2016 யூன் 17 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதான அனுப்பப்படுதல் வேண்டும்.<br>• தபால் தாமதமடைதல் அல்லது இணையத்தில் காணப்படும் தொழினுட்பப் பிரச்சினைகள் போன்றவற்றிற்கு நிறுவகம் எந்த வகையிலும் பொறுப்பேற்காது. |
| பொதுத் தகவல்கள் | • விண்ணப்பங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட குறுகிய பட்டியலில் உள்ளடக்கப்படும் பரீட்சார்த்திகள் மட்டுமே நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.<br>• தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்தியை 2016 யூலை 1 ஆந் திகதியளவில் இணைத்துக்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.<br>• விளம்பரப்படுத்தப்பட்ட பதவிக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கு அல்லது நிரப்பாது விடுவதற்கு நிறுவகத்திற்கு உரிமை உண்டு.<br>• தகைமைகள் மற்றும் அனுபவங்களின் அடிப்படையில் நியாயமானதொரு எல்லைக்குள் நேர்முகப்பரீட்சைக்கான பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துவதற்கு நிறுவகத்திற்கு உரிமை உண்டு.<br>• பரீட்சார்த்தி ஒருவர் நிறுவகத்தில் இணைந்து கொள்ளும் சந்தர்ப்பத்தில், அவர் நிறுவகத்தின் தகுதிவாய்ந்த அதிகாரியிடம் இருந்து எழுத்துமூல அனுமதியைப் பெற்றுக் கொள்ளாது ஏதாவது பகுதிநேர அல்லது முழுநேர நியமனம் அல்லது பாடநெறிக்காக விண்ணப்பிக்கப் போவதில்லை என்ற எழுத்துமூல உடன்பாட்டை வழங்குவதற்கு தேவைப்படுத்துகின்ற விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். அத்துடன் நிறுவகத்தில் பணியாற்றும் வேளையில், அவர் ஏதாவது வர்த்தகத்தில் அல்லது வியாபாரத்தில் ஈடுபடக்கூடாது என்பதுடன் வேறு ஏதாவது முழுநேர அல்லது பகுதிநேர நியமனத்தையும் வகித்தல் கூடாது.<br>• தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரி, INSS புலமையாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு ஏற்புடையதான ஏனைய விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும் கட்டுப்படுவார். |

- பட்டியலிடப்பட்ட பணிக் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள், வகிபாகத்தின் பொதுவான நிலமையை விளக்குவதற்கான நோக்கத்தைக் கொண்டுள்ளன. கடமைகள், பொறுப்புக்கள் மற்றும் வகிபாகத்தின் கூறுகளுக்கிடையேயான சமநிலை என்பன குறிப்பிட்ட நேரம் ஒன்றில் நிறுவனத்தின் தேவைகளை மாற்றுவதன் காரணமாக, மாறிவருகின்ற நிறுவனத்தின் தேவைகளின் மீது மாற்றமடையலாம் அல்லது மேலதிக காலத்தின்பால் வேறுபாடு அடையலாம்.